1984 மார்ச் 6]

புதுக்கோட்டை காவேரி நூற்பாலை.

187—*வினா எண் 2140-3திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை காவேரி நூற்பாலையைத் தமிழக அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆலையின் வருங்கால அமைப்பு பற்றிய அரசின் செயற் குறிப்புகளில், இவ்வாலையை நாட்டுடமை ஆக்குவது சம்பந்தமான செயற்குறிப்பும் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நாட்டுடைமையாக்கும் செயற் குறிப்பில் இந்த ஆலை இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து அது நலிந்து கொண்டு வருகிறது. மேலும் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத ஒரு நிலை இருக்கிற காரணத்தால், தற்போது அதை எடுத்துக் கொள்ள அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் நலன்மீது இந்த அரசு அக்கறை கொண்டிருந்த காரணத்தால்தான் ஐ. டி. ஆர். ஆக்ட் 21 ஆம் பிரிவின்படி மைய அரசு நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தி, மைய அரசு அனுமதி தந்து, தற்போது தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அந்த நிர்வாகத்தை மேற்கொண்டு தொழிலாளர்களை காக்க நடைமுறைகளைச் செய்து வருகிறது. நாட்டுடமையாக்கவேண்டும் என்பதற்காக மைய அரசு மீண்டும் அனுமதி தர வேண்டும். தனியாக சட்டம் கொண்டு வர வேண்டும். ஏனென்றால், கான்கரண்ட் ஆர்டிகல் என்ட்டிரி லிஸ்ட் 42-வது பிரிவின் படி மைய அரசின் அனுமதி இல்லாமல் நாட்டுடமையாக்க முடியாது. அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். மைய அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றும் அனுப்பப் பட்டிருக்கிறது. மைய அரசுக்கு மாநில அரசு இது குறித்து நினைவுபடுத்தியிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலுள்ள இந்த காவிரி நூற்பு ஆலை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நலிவுற்ற நிலையிலே இருந்து வருகிறது. இன்றைக்கும் அந்த ஆலை இயங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலேயே தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கிற தொழிலாளர்கள் அவர்களுக்குரிய பல தொழில் சட்டங்களிலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப்பட்டு, பின் தங்கிய நிலையில் தள்ளப்பட்டு, தற்போது அவர்களுக்கு

வேலையற்ற நிலைமையே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை கருத்தில் கொண்டு, உடனடியாக அதை அரசு எடுத்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஆலைக்குச் சொந்தக்காரர்களுக்கு இந்த அரசு எந்தச் சலுகையையும் அளிக்கவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் தொழிலாளர்களுக்கு சலுகை அளிக்கவேண்டுமென்ற நோக்குடன் இருக்கிறது. அந்த ஆலையின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதற்கட்டமாக மைய அரசிடம் கூறி, மைய அரசு நிர்வாகத்தை எடுத்திருக்கிறது. ஆலையை நாட்டுடமையாக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. காரணம், இருக்கின்ற மூலதனத்தை வைத்து அந்த ஆலையை செம்மைப்படுத்திவிட முடியாது. நாட்டுடமையாக்கி இன்ஸ்டிடியூஷனல் பைனான்ஸ் மூலமாக செம்மைப்படுத்தினால் ஆலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, தொழில் வளர்ச்சியாக இருந்தாலும் சரி, அது அதற்கு உகந்ததாக இருக்கும் என்ற முறையிலே அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, காவிரி மில்லிலே இருக்கக்கூடிய அந்த மெஷினரிகள் எல்லாம் அந்த மில் என்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அன்றைக்குப் போடப்பட்டவை. அவைதான் இன்றைக்கும் இருக்கின்றன, பழைய மெஷினரிகள். அந்தக் காரணத்தினால் அடிக்கடி அந்த மில் மூடப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணத்தினால் அந்தத் தொழிலாளர்களுக்கு பகுதி நாள் வேலை கிடைப்பதும் பகுதி நாள் வேலை கிடைக்காமலும் போய்விடுகிறது. அதை அரசாங்கம் என். டி. சி. மூலமாக விரைவிலே எடுத்துக்கொண்டு அந்த மெஷினரிகளைப் புதுப்பித்து ஓட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிர்வாகத்தை எடுக்க மைய அரசு அனுமதித்து மாநில அரசு 57 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அளவுக்கு பொறுப்புறுதி வழங்கி அந்த ஆலையிலே உள்ள பழமையான கதிர்களையெல்லாம் மாற்றிப் புதுமையாகப் போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இதுபோன்ற பணிகளை தொடர்ந்து முழுமையாகச் செய்யக்கூடிய முறையிலே அந்த ஆலையை நாட்டு உடைமையாக்கிவிட்டால் இன்னும் சற்று அதிகமான முறையிலே இன்ஸ்டிட்யூஷனல் பைனான்ஸ் பெற்று செம்மைப்படுத்த முடியும். மாநில அரசு மைய அரசிடம் அதற்கு அனுமதி கேட்டிருக்கிறது. அந்த அனுமதி வந்தவுடன் தக்க சட்டம் இயற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.